# ஞான தீபம்

## ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள்

**விளக்கு ஒளி தந்து பொருள்களைப் புலப்படுத்துகிறது;
ஞானதீபம் நம்மை நாமே அறியச் செய்கிறது:**

பிரதியொரு மனிதனும், இந்த உலகத்தில், எந்தவிதத் துக்கமும் இல்லாமல், எந்த விதக் கஷ்டங்களையும் அநுபவிக்காமல் வாழ வேண்டுமென்று ஆசைப்படுகிறான். அது மட்டு மன்று; பரிபூரண சந்தோஷத்தை, அதாவது துக்கக்கலப்படமில்லாமல், சாசுவதமாக இருக்கக்கூடிய சந்தோஷத்தை-சுகத்தை-அநுபவிக்க வேண்டுமென்றும் விரும்புகிறான். இப்படித் துக்கத்தினால் கறைபடாததும் எப்பொழுதும் பூரணமாயும் உள்ள சந்தோஷத்தை ஆனந்தம் என்று சொல்லுவார்கள். இந்த ஆனந்தத்தை அநுபவிப்பது நமது பிறப்புரிமை.

நம் ஒவ்வொருவரிடத்திலும் ஆத்மா என்பதொன்று இருக்கிறது. அதுதான், அநித்தியமான சரீரத்துக்குள் சரீரியாக இருந்து கொண்டு நம்மை இயங்க வைக்கிறது. இந்த ஆத்மா, சுபாவத்திலேயே ஆனந்த மயமானது. ஆனால் இந்த ஆனந்தம், அடர்ந்த ஓர் இருளில் மறைந்திருக்கிறது.

இந்த உலக வாழ்க்கையில் ஈடுபட்டிருக்கிற நாம் எத்தனையோ காரியங்களைச் செய்துகொண்டு வரவேண்டியிருக்கிறது. ஆனால் இந்த உலக வாழ்க்கையின் பெரும் பகுதி துக்க மயமாகவே இருக்கிறது. இருந்தாலும் இந்த வாழ்க்கையின் மத்தியில், அவ்வப்பொழுது மேற்படி ஆனந்தத்தின் சிறு சிறு துளிகளை நாம் நாடிச் செல்கிறோம்.

இருள் அகன்று விட்டால், அந்த இருட்டினால் ஏற்பட்ட கஷ்டங்களும் அகன்று போகும். அப்படி அகன்று போவதற்கு, வெளிச்சம் தேவை. ஒரு விளக்கை ஏற்றி வைத்த மாத்திரத்தில், இருள் தானாகவே அகன்றுவிடுகிறது.

சம்சாரமென்னும் அந்தகாரச் சுழலில் சிக்கிக்கொண்டிருக்கிற நமக்கு வெளிச்சத்தை - விளக்கை - அருளக்கூடியவன் ஒருவன் இருக்கிறான். அவன்தான் சர்வேசுவரன். 'உலகம் யாவையும் தாமுள வாக்கலும் நிலைபெறுத்தலும், நீக்கலும், நீங்கலா அலகிலா விளையாட்டுடையவன்' அந்தச் சர்வேசுவரன். அவன் சர்வஞ்ஞன்; சகல சக்திகளும் உடையவன். ஆத்ம சாட்சாத்காரத்தின் மூலம் அவனைக் கண்டறிந்த மகரிஷிகளென்ன, பக்தர்களென்ன, இப்படிப் பலரும் ஒன்றிய மனத்துடனும், தங்கள் ஆவியும் உடைமையுமெல்லாமும் அவனிடத்தில் ஒப்புக்கொடுத்துவிட்ட மனப்பான்மையுடனும் அவனை அந்தச் சர்வேசுவரனை வழிபட்டு வந்திருக்கிறார்கள். அப்படி வழிபட்டு வருவதுதான் அவர்களுடைய வாழ்க்கையின் லட்சியமாக இருந்துவந்திருக்கிறது. அவர்கள் அவனைப் பற்றியே சதா சிந்தித்து வந்தார்கள்; வேத சாஸ்திரங்களின் பிரமாணப் பிரகாரம், அவனைப் பற்றியே பேசி வந்தார்கள்; தங்கள் வாழ்க்கை முழுவதையும் அவனிடத்தில் பக்தி கொண்ட

...த்து வந்தார்கள்; இப்படி அந்தச் சர்வேசுவரனை வழிபட்டு...தன் மூலம், தங்களுக்குத் தேவைப்பட்ட ஆத்மிகச் செல்வம் அனைத்...தையும் பெற்றுவிட்டதாக உணர்ந்து, லௌகிக சுகங்களில் பற்றில்லா...தவர்களாய், ஆனந்தமாக வாழ்ந்து வந்தார்கள். இதைக் கீதையில் பகவான் பின்வருமாறு வலியுறுத்துகிறார்:

“நான் அனைத்துக்கும் பிறப்பிடம். யாவும் என்னிடத்திலிருந்தே விரிகின்றன. இதை அறியும் ஞானிகள் என்னை அன்புடன் வழுத்துகிறார்கள்.

‘சித்தத்தை என்பால் வைத்து, உயிரை எனக்குரியதாக்கி ஒருவருக்கொருவர் என்னை விளக்கிக் கொண்டும் என்னைப் புகழ்ந்து பேசியும், மனநிறைவடைந்தும் மகிழ்வடைந்தும் இருக்கிறார்கள்” (அத். 10, சுலோகம் 8, 9).

இப்படிப் பக்தி செலுத்துகிறவர்களிடத்தில் பகவான் அதிகப் பிரியமுடையவராய், அவர்கள் மீது தமது கருணையை மழையாகப் பொழிகிறார். அவர்களிடத்தில் அதிகமாக ஈடுபட்டு, அவர்கள் தம்மிடத்தில் எந்த அளவுக்கு எந்த விதமாகப் பக்தி செலுத்துகிறார்களோ அந்த அளவுக்கு அந்த விதமாக அவர்களுக்கு அநுக்கிரகம் செய்கிறார். பகவான், கீதையில் கூறுகிறார்:

“யார் என்னை எப்படி வழிபடுகிறாரோ அப்படியே அவருக்கு நான் அருள்புரிகிறேன்” (அத். 4, சுலோகம் 11).

பகவான் தம்மிடத்தில் அசஞ்சலமான பக்தி கொண்டவர்களுக்குத் தம்மை வந்தடையும் ஞானபரிபக்குவத்தை அளிக்கிறார்.

அதாவது யாரொருவர் பகவானிடத்தில் பரமபக்தி கொண்டு அவருடைய நினைவாகவே இருக்கிறாரோ அவருக்கு - அந்தப் பரம பக்தருக்கு - அவரை அறியாமலே, பரப்ரஹ்மமும் தாமும் ஒன்று என்று அநுபவ அறிவு உண்டாகும்படி பகவான் அருள்கிறார். அதாவது ‘அஹம் ப்ரஹ்மாஸ்மி’ - நானே ப்ரஹ்மமாயிருக்கிறேன். என்ற இரண்டறக் கலந்திருப்பதற்கான அநுபவம் அந்தப் பக்தருக்கு ஏற்படுகிறது.

‘ஞான’த்தை வெளிச்சத்துக்கும் அஞ்ஞானத்தை இருட்டுக்கும் ஒப்பிட்டுச் சொல்வது வழக்கம். பகவான் இப்படியே கீதையில் சொல்கிறார்:

“நான் அவருக்கு அருளால் இரங்கி அந்தக்கரணத்தில் வீற்றிருந்து மெய்ஞ்ஞானச் சுடர் விளக்கால் அஞ்ஞானத்து உதித்த ஆரிருளை அகற்றிவிடுகிறேன்.” (அத். 10, சுலோகம் 11).

ஒரு விளக்கை எரிய வைக்க எண்ணெய் தேவையாயிருக்கிறது. அந்த எண்ணெயைக் கொள்வதற்கு ஒரு பாத்திரமும், அந்த எண்ணெயில் தோய்ந்த திரியும் அவசியம். திரியை ஏற்றியதும் லேசான காற்று இருக்கும் பட்சத்தில், விளக்கு அணையாமல் எரிந்து கொண்டிருக்கும். அந்த விளக்கின் பிரகாசத்தில், எப்படிப்பட்ட மையிருட்டும் நம்முடைய முயற்சி இல்லாமல் தானாகவே அகன்றுவிடும்.

ஞானதீபம் என்பது, ‘அஹம்ப்ரஹ்மாஸ்மி’ என்பது போன்ற மகாவாக்கியங்களினால் அறிவிக்கப்பட்ட அந்தரக்கரணத்தின் பரிணாமமேயாகும். ப்ரஹ்மசர்யத்தை அநுஷ்டித்தல் முதலிய கடமைகளைச்

செய்துகொண்டு வருவதனால் பரிசுத்தமடைந்த மெய்யறிவுதான் மேற்படி தீபத்துக்குத் திரி. பகவானிடத்தில் பக்தி செலுத்தி அதன் காரணமாக அவனுடைய அருளைப் பெறுவதுதான் மேற்படி தீபத்துக்கு எண்ணெய். இந்த எண்ணெயில் மெய்யறிவு என்ற திரி நனைக்கப்பட்டிருக்கிறது. பகவானிடத்தில் மனத்தை ஒருமுகப்படுத்திச் செலுத்துவதுதான் மேற்படி ஞானதீபத்தை அணையாமல் ஒளி விட்டுப் பிரகாசிக்கச் செய்யவல்ல மெல்லிய பூங்காற்று. வைராக்கியதுக்கு எடுத்துக் காட்டாகவுள்ள அந்தக்கரணமே எண்ணெய்ப் பாத்திரம். பேராசையும் துவேஷமும் இல்லாத மனந்தான் திறந்த வெளி. இந்த வெளியில் பலத்த காற்று வீசுவதில்லை. பகவான் அஞ்ஞானமான இருட்டைப் போர்த்து ஞானமான தீபத்தை அணையவிடாமல் பாதுகாக்கிறார். அந்தப் பாதுகாப்பின் விளைவாக, ஆத்மாவைப்பற்றி ஏற்படுகிற தப்பபிப்பிராயங்களெல்லாம் அழிந்து ஒழிந்து விடுகின்றன. அந்த நிலையில் பக்தன் செய்வதற்கு ஒன்றும் இல்லை. ஆனந்தமயமான ஜோதி ஸ்வரூபத்தில் அதாவது ப்ரஹ்மத்தினிடத்தில் தன்னை ஐக்கியப்படுத்திக்கொண்டு விடுகிறான்.

ஒரு தீபமானது, ஒரே சமயத்தில், (1) ஓரிடத்தில் சூழ்ந்து கொண்டிருக்கிற இருட்டைப் போக்குவது; (2) அதுகாறும் அந்த இருட்டில் மறைந்து கிடந்த பொருள்களைத் தெரியும்படி செய்வது. இப்படி இரண்டு காரியங்களைச் செய்கிறது. தீப வெளிச்சத்தினால் புதியதொரு பொருள் நம் பார்வைக்குத் தென்படுகிறது. தீபத்தை ஏற்றுவதைத் தவிர நாம் வேறொரு காரியத்தையும் செய்ய வேண்டுவதில்லை. அது வரையில் இருட்டில் மறைந்து கிடந்த பொருள்களெல்லாம், தாமாகவே நமக்குத் தெரியவருகின்றன. ஆனந்தமயமான ஆத்மாவை மூடிக்கொண்டிருக்கும் அஞ்ஞானத்தை இதேபோல் ஞானமானது அகற்றிவிடுகிறது. இதிலிருந்து, ஞான தீபத்தின் வெளிச்சத்தில் புதிய பொருள் ஒன்றும் சிருஷ்டியாவதில்லை யென்பதும், ஏற்கெனவே மறைந்து கிடந்த பொருள்தான் வெளிப்படுகிறதென்பதும் உறுதியாகின்றன. ப்ரஹ்மமே ஆனந்த மயமானதுதான். நாம் ஒவ்வொருவரும் உண்மையில் பரப்ரஹ்ம ஸ்வரூபமாகவே இருக்கிறோம். ஜீவாத்மா, ப்ரஹ்மமாக இருக்கிறதென்று சாஸ்திரங்கள் முழங்குகின்றன. இந்த ஜீவ - ப்ரஹ்ம ஐக்கியத்தை ப்ரஹ்மாநுபவம் என்று குறிப்பிடுவார்கள்.

மாயையானது மிகவும் சக்தி வாய்ந்தது. நம்முடைய சுயத் தன்மையை அறிந்துகொள்ளாமல் செய்துவிடுகிறது. அப்படி அறிந்துகொள்ளாமல் இருப்பதுதான் அஞ்ஞானம் என்னும் இருட்டு. அந்த அஞ்ஞான இருட்டைப் போக்க, அதாவது நமது சுயத் தன்மையை அறிந்து கொள்ள ஞானதீபம் உதவுகிறது. ஆதலின் நாமெல்லோரும் இந்த ஞான தீபத்தை ஏந்திக்கொண்டிருக்கும் பரப்ரஹ்மத்தை நோக்கி, 'தமஸோ மா ஜ்யோதிர் கமய' (இருட்டிலிருந்து வெளிச்சத்திற்கு அழைத்துக்கொண்டு போ) என்று பிரார்த்தனை செய்வோமாக!

நன்றி: ம